# அன்னை கதீஜா (ரலி)



அகத்தி முறிப்பான்

முனீரா பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S.F. Farhana Fareed.
29.

விசுவாசிகளின் தாய்மார்கள்-1

Puttalam.

# அன்னை கதீஜா (ரலி)

(சிறுவர்களுக்கானது)

அகத்தி முறிப்பான்

வெளியீடு
'முனீரா பதிப்பகம்'
248, தம்புச் செட்டி தெரு
சென்னை - 600 001.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தக விபரத் தொகுப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | அன்னை கதீஜா (ரலி) |
| ஆசிரியர் | : | அகத்தி முறிப்பான் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே! |
| வெளியீட்டு நாள் | : | ஜுன் - 2004 |
| பிரதிகள் | : | 3000 |
| பக்கங்கள் | : | 32 |
| அச்சுக்கோவை | : | 'ஸாஜிதா கிராபிக்ஸ்' சென்னை-1, PH: 25224821 |
| அச்சிட்டோர் | : | கிராபிக் பார்க் சென்னை-5 போன்:28444445 |
| வெளியீடு | : | 'முனீரா பதிப்பகம்' 248, தம்புசெட்டி தெரு, சென்னை - 600 001. |
| விலை | : | ரூ. 7-00 |

கிடைக்குமிடம்

'ஸாஜிதா புக் சென்டர்'

248, தம்புச் செட்டித் தெரு,
சென்னை - 600 001.
PH: 25224821



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

பாசமிகு வாசகர்களே !

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மனைவியர்கள் பற்றி தூய வடிவில் நமது சிறார்கள் கற்றுக் கொள்வதற்காக முதல் மனைவியான அன்னை கதீஜா (ரலி) அவர்களின் வாழ்க்கையை, முடியுமான வரை முயற்சி செய்து அவர்களுக்கேற்ற வகையில் இச்சிறு நூலில் உருவாக்கியுள்ளேன். சிறுவர் இலக்கியத்தில் இது எனது முதற்படியாகும். இதன் தொடரில் ஏனைய அன்னை யர்களையும் இதுபோன்ற சிறு நூற்களாகக் கொண்டுவர இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

வழமையான உங்களின் ஆதரவை இதற்கும் இன்ஷா அல்லாஹ் நல்குவீர்கள் என்ற நம்பிக்கையில் உங்களின் சிறார்களுக்கு இந்நூலை படிக்கக் கொடுப்பதுடன் நீங்களும் இதனை வாசித்து இடம் பெற்றிருக்கும் தவறுகளை சுட்டிக் காட்டுவீர்கள் என எதிர்பார்க்கிறேன். அது அடுத்த பதிப்பில் திருத்திக் கொள்ளவும் ஏனைய அன்னையர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி எழுதுவதற்கான உங்களின் தூண்டு தலாகவும் அமையும். இன்ஷா அல்லாஹ்.

இதன் கையெழுத்துப் பிரதியைப் படித்துப் பின்பு திருத்தி பதிப்பிக்க ஊக்கமளித்த இலங்கை, ஜம்இய்யது அன்சாரிஸ் சுன்னதில் முஹம்மதிய்யாவின் செயலாளர் A.L. கலீலுர் ரஹ்மான் M.A. அவர்களுக்கும், இதைப் பதிப்பிக்கும் ஸாஜிதா புத்தக நிலைய உரிமையாளரும், நண்பருமான ஜகரிய்யா அவர்களுக்கும் வாசகர்களாகிய உங்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள். எனக்காகவும், என்னை ஆளாக்கிய என் அன்னைக்காகவும் பிரார்த்திக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இந்நூலை பயன்மிக்கதாக அமைய வல்ல அல்லாஹ் அருள் புரிவானாக.

அகத்திமுறிப்பான்

2004-06-05

Seindeen S. Fareed

140, RASOOL NAGAR,

NAHAVIL PALAVI,

PUTTALAM, SRILANKA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குவைலித் மகள் கதீஜா

பண்டைய காலம், அரேபியத் தீபகற்பம் வியாபாரத்திற்கு பேர்போன இடம். அதிலும் குறிப்பாக மக்கமா நகரம் மிகவும் சிறப்புப் பெற்று விளங்கிற்று. அங்கு பெரும் செல்வந்தர்கள் வாழ்ந்து வந்தனர். அதில் கதீஜா என்ற பெண்ணும் ஒருவர். முகடு முட்டிய செல்வத்தின் அதிபதி அவர்கள்.

ஒரு நாள் இரவு. நடுநிசி நேரம். அகால வேளை. எங்கும் மயான அமைதி. மக்கத்து மக்களை தூக்கம் அரவணைத்துக் கொண்டது. செல்வச் சீமாட்டி, பரிசுத்த மாது அன்னை கதீஜாவும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்கள். அவ் வேளை அவர்கள் ஒரு கனவு காண்கிறார்கள்.

ஒளி கொடுக்கும் சூரியன், அவர்களது வீட்டு முகட்டில் வீழ்வது போலவும், அதனால் அவ்வீடும் அதைச் சுற்றியுள்ள அனைத்தும் ஒளிமயமாகி இருப்பதாகவும் அக்கனவில் காட்டப்படுகிறது.

திடுக்கிட்டு எழுந்தார்கள் அன்னை கதீஜா அவர்கள். அக்கனவு பற்றி எதையுமே யூகிக்கவோ, கிரகிக்கவோ அவர்களால் முடியவில்லை. தன் வாழ்வில் பசுமையை ஏற்படுத்தப் போகின்ற முன்னறிவிப்பா? அல்லது மோசமான நிகழ்வுகளுக்கான அறிகுறியா? என சிந்தனை வயப்பட்ட அன்னை அவர்கள், வெளியே எட்டிப் பார்க்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்குமே இருள் மயம். மக்கமாக நகரம் இருளின் பிடியிலிருந்து இன்னும் விடுபடவில்லை. வெளியில் சென்று யாரிடமாவது இவ்விடத்தை கூறி விளக்கம் கேட்கலாம் என்றால், அதற்கு உகந்த நேரம் இதுவல்ல. மிகவும் சங்கடப்பட்டார்கள். எப்போது இருள் கலையும் என்று காத்திருந்தார்கள்.

மக்கமா நகரில் வரகத் பின் நவ்பல் என்றொரு மனிதர். அவர் அன்னை அவர்களது சாச்சாவின் மகன். தம்பி உறவு முறை. பெரும் அறிவாளி. சிந்தனையாளர். அவர் விக்கிரகங்களை வணங்காதவர். அவ்வணக்க வழிபாட்டை முற்று முழுதாக வெறுத்தவர். கிறிஸ்தவ மார்க்கத்தை ஏற்றிருந்தவர். வேத நூற்களை படித்து நன்கு ஆய்வு செய்து வைத்திருந்தவர். அவரிடம் மாத்திரமே இதற்குரிய விளக்கம் பெறலாம் என அன்னை அவர்கள் எண்ணினார்கள்.

கிழக்கு வெளுக்கும் வரை காத்திருந்தார்கள், அன்னை அவர்கள். இப்போது மக்கமா நகரத்து வீதிகளில் ஒளி படர ஆரம்பித்தது. விடிவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. தன் கனவின் நிலை அறிய ஆவலாய் இருந்த அன்னை அவர்கள், வீட்டை விட்டு வெளியேறினார்கள். அம் முதியவர் வரகத் பின் நவ்பல் அவர்களது இல்லம் நோக்கி வேகமாக நடை போட்டார்கள்.

அதிகாலை நேரம். வீட்டின் கதவு தட்டப்படுவதையும், வெளியே அன்னை கதீஜா அவர்களது சத்தத்தையும் கேட்ட பெரியவர் வரகத் பின் நவ்பல் அவர்கள், ஏதோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கக் கூடாதது நடந்து விட்டதுபோலும் என எண்ணியவர்களாக, எழும்பி வந்து மிக அமைதியாக வீட்டின் கதவைத் திறந்தார்கள். அன்னை அவர்களை உள்ளே வரவேற்றார்கள். வந்த நோக்கம் பற்றி விசாரித்தார்கள்.

தான் கண்ட கனவை விலாவாரியாக விளக்கிக் கூறினார்கள் அன்னை கதீஜா அவர்கள். கேட்டுக் கொண்டிருந்த பெரியவர் வரகத் பின் நவ்பல் அவர்களது முகம் மகிழ்ச்சியால் மாறுதலடைந்தது. நீண்ட ஒரு புன்னகை அவர்களது உதடுகளில் தவழ்ந்தது. அன்னையை ஏறிட்டுப் பார்த்த பெரியவர் வரகத் பின் நவ்பல் அவர்கள் ......

'கதீஜா!
உனக்கு நற்பாக்கியம் கிடைக்கப்போகிறது.
நபி ஒருவர் வெளிவரப் போகிறார். நபித்துவம் வெளிப்படப் போகிறது.
அது உன் வீட்டிலிருந்து உதயமாகப் போகிறது.
அதனால் இவ்வுலகு ஒளி பெறப் போகிறது'
என்று கூறி நிறுத்தினார்.

தனது கனவுக்குரிய பலனை நன்கு கேட்டுக் கொண்ட அன்னை அவர்கள், அவ்வீட்டிலிருந்து விடை பெற்றார்கள். அவர்களது உள்ளம் இப்போது அமைதி அடைந்திருந்தது. மிக நிம்மதியாக மூச்சு விட்டார்கள். தனது வீடு நோக்கி மிக ஆறுதலான எட்டுகள் வைத்தார்கள். இருந்தும் .....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நபி யார்? அந்த நபித்துவம் எது?
என்ற வினாவுக்கு விடை தேடிய வண்ணம் அவர்களது சிந்தனை மாத்திரம் சிறகடித்துக் கொண்டிருந்தது.

பெரியவர் வரகத் பின் நவ்பல் அவர்கள், முன்னைய வேதங்களைப் படித்தவர். அதனால் அரபிகளில் ஒரு நபி அனுப்பப்படுவார் என்பதும், அதற்குரிய காலம் கனிந்து விட்டது என்பதும் அவருக்குத் தெரிந்திருக்க நியாயம் இருக்கிறது. அன்னை கதீஜா அவர்கள் இதனை அறிந்திருக்க எந்த வாய்ப்பும் இல்லை. முழு உலகுக்கும் தீன் ஒளி பரப்ப வர இருக்கின்ற அவர் பற்றி அன்னைக்கு என்ன தெரியும்? அவர்தான் செல்வச் சீமாட்டியாயிற்றே.

அன்னை அவர்களது வியாபாரப் பொருட்களை, வெளியூர் சந்தைகளுக்கு எடுத்துச் சென்று விற்று வர பலர் போட்டி இடுவர். ஏனெனில் அன்னை அவர்கள் கொழுத்த செல்வச் சீமாட்டி. வழமைபோல் இம்முறையும் அந்த நோக்கத்திற்காக வீடு தேடி வந்தவர்கள் ஏராளம். அனைவருக்கும் ஆறுதல் கூறி திருப்பி அனுப்பி விட்டார்கள் அன்னை அவர்கள்.

ஏனெனில் இம்முறை தமது வியாபாரப் பொருட்களுக்கு தலைமை தாங்கி எடுத்துச் செல்ல முஹம்மத் பின் அப்துல்லாஹ் அவர்களையே தெரிவு செய்ய வேண்டும் என அன்னை அவர்கள் நினைத்திருந்தார்கள். இம்முடிவில் அவர்கள் தளரவில்லை. இதற்கான காரணமும் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது முஹம்மத் பின் அப்துல்லாஹ் அவர்களிடம் அன்னையர் கண்ட நேர்மையும், மதி நுட்பமும், நற்குணமுமேயாகும். இதை மக்கத்து மக்களும் அறிந்து வைத்திருந்தனர்.

எனவே இது விஷயமாக கலந்தாலோசனை செய்வதற்காக ஒருவரை, முஹம்மத் பின் அப்துல்லாஹ் அவர்களின் சிறிய தந்தையார் அபூதாலிபிடம் அன்னை கதீஜா அவர்கள் அனுப்பினார்கள். ஏனெனில் அச்சமயம் முஹம்மத் பின் அப்துல்லாஹ் அவர்கள் அபூதாலிப் அவர்களது பராமரிப்பிலேயே இருந்தார்கள். இதில் நல்ல முடிவு வருமானால், அவருக்கான கூலி இரு மடங்காக வழங்கப்படும் எனவும் வாக்குறுதி அளித்தா ர்கள்.

தன் சகோதரன் அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மத் அவர்களிடம் இவ்விஷயத்தைக் கூறி, எப்படியும் அவரை சம்மதிக்க வைப்பதாகவும், அதற்குரிய முறையில் தான் நடந்து கொள்வதாகவும், வந்தவரிடம் பெரியவர் அபூதாலிப் உறுதியளித்து அனுப்பி வைத்தார்கள்.

இருந்தும் இப்படி ஒரு தேவை அங்கு ஏற்படவில்லை. காரணம் அன்னை கதீஜா அவர்களின் சிந்தனையில் இதை உதிக்க வைத்த அந்த ஏகன், பெரியவர் அபூதாலிப் அவர்களை இணக்கம் தெரிவிக்க வைத்த அவன், முஹம்மத் (ஸல்) அவர்களையும் இணங்க வைத்தான். இதில் ஆச்சரியத்திற்கு இடமில்லை. எனவே முஹம்மத் (ஸல்) அவர்களும் விரும்பி ஒப்புதல் கொடுத்து விட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது, தான் மேற்கொள்ளப் போகும் பிரயாணம் பற்றியும், வியாபார விசயங்கள் பற்றியும் கலந்துரையாட வேண்டும். ஆலோசனை நடத்த வேண்டும் என முஹம்மத் (ஸல்) அவர்கள் விரும்பினார்கள். அதற்காக அன்னை கதீஜா அவர்களின் இல்லம் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது. அமைதியாக நடை போட்டார்கள்.

இல்லம் நோக்கி வந்த முஹம்மத் (ஸல்) அவர்களை திறந்த மனதோடும் சிரித்த முகத்தோடும் இதய சுத்தியோடும் அன்னை அவர்கள் வரவேற்றார்கள். இருந்தும் அன்னையாரை இவர்கள் ஏறிட்டும் பார்க்கவில்லை. பார்வையால் விழுங்கவில்லை. அவர்கள் நற்குணத்தின் பொக்கிஷம் அல்லவா? வீட்டின் உள்ளே செல்லவும் அனுமதி பெறுவார்கள். அதுபோலவே வெளியேறவும் அனுமதி கோருவார்கள். இப்படிப்பட்ட அந்த மாமனிதருக்கு ஒழுக்கத்தைப் பற்றி நாம் சொல்லிக் கொடுக்கவா வேண்டும்?

முஹம்மத் (ஸல்) அவர்களுடன் உரையாடும் போதெல்லாம் மற்ற ஆண்களிடம் காணாத மன நிறைவையும் ஆத்ம திருப்தியையும் அன்னை அவர்கள் கண்டார்கள். ஏனைய ஆடவர்களிடம் இல்லாத ஏதோ ஒரு சக்தி இவர்களிடம் இருப்பதாக உணர்ந்தார்கள்.

இவர் உயர்ந்தவர். இவர் மக்களை மேய்ப்பவர். மனிதர்களை புனிதர்களாக மாற்றுபவரன்றி வியாபாரப் பொருட்களோடு அலையும் ஒருவரல்ல. நிச்சயமாக இவர் புனிதமானவர் என்ற முடிவுக்கு அன்னை அவர்கள் வந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டகங்கள் கொண்டு வரப்பட்டன. வியாபாரப் பொருட்கள் அனைத்தும் ஒட்டகங்களில் ஏற்றப்பட்டன. அவைகள் ஷாம் தேசம் நோக்கிச் செல்ல சகல ஏற்பாடுகளும் செய்தாகிவிட்டன. முஹம்மத் (ஸல்) அவர்களது தலைமையில் குறிப்பிட்ட நேரத்தில் அவை புறப்பட்டும் சென்றன.

நாட்கள் பல நகர்ந்தது. ஷாம் தேசம் சென்றடைந்தது ஒட்டக அணி. வழியில் எந்தத் தொல்லைகளும் இடையூறுகளும் இல்லை. கொண்டு சென்ற பொருட்கள் அனைத்துமே விற்கப்பட்டன. மக்காவுக்கு கொண்டு வருவதற்கான பொருட்கள் வாங்கப்பட்டன. இம்முறை வியாபாரத்தில் நிறையவே இலாபம். இதற்கு முன்னர் இப்படி நடந்ததே இல்லை.

அச் செல்வங்களின் அதிபதியான அன்னை கதீஜா, ஷாம் பிரதேசத்திலிருந்து ஏதாவது செய்தி வராதா? என ஏங்கிக் கொண்டிருந்தார். அந்த வேளையில்தான் மக்கா வந்தனர் சில நாடோடிகள். ஷாமில் நடந்தவற்றை அவர்கள் அன்னையிடம் கூறினர். வியாபாரக் குழு வெகு விரைவில் மக்கா வந்தடையும் என்றும் கூறி வைத்தனர்.

அன்னை அவர்களது வீட்டில் உயரமான ஓர் இடம் இருந்தது. அதில் ஏறி நின்று தூரத்தில் வருகின்றவைகளைப் பார்க்கலாம். அதில் ஏறி தனது வியாபாரக் கூட்டத்தை தேடினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றொரு நாள். அன்னை அவர்கள் அதில் ஏறினார்கள். கூடவே அவர்களது தோழி நபீசாவும் இருந்தார்கள். அவர்களது பணிப்பெண்கள பலர் பின்னால் நின்றிருந்தார்கள்.

அப்போது தூரத்தே மைசறா என்ற சிறுவன் தென்பட்டான். அவன் அவர்களது பணியாட்களில் ஒருவன். அந்த வியாபாரக் கூட்டத்தோடு சென்றிருந்தவன். அவன் மிக வேகமாக அன்னை அவர்களது இல்லம் நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தான். இதனை அவர்கள் பொருட்படுத்தவில்லை.

அவர்களது பார்வை முஹம்மத் பின் அப்துல்லாஹ் அவர்களையே தேடியது. அன்னை அவர்களது பார்வையில் தென்பட்ட அனைத்துமே அவர்களாகவே இருந்தது. இருந்தும் கூர்ந்து கவனித்து அடையாளம் கண்டு கொண்டார்கள். தன் தோழி நபீசாவிடம் 'அதோ பார்' அவர் வருகிறார்' என்று கூறினார்கள். வாருங்கள் இறங்கிச் சென்று அழைத்து வரலாம்' என தோழி நபீஸா ஆலோசனை கூறினாள். பின்னர் இருவரும் அங்கிருந்து இறங்கினர்.

இருந்தும் முஹம்மத் (ஸல்) அவர்கள் நேராக கஃபா நோக்கி நட ந்தார்கள். அதை தவாப் செய்தார்கள். பின்னர் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதங்களை ஒப்படைப்பதற்காக அன்னையின் வீடு நோக்கி நடை போட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கிடையில் சிறுவன் மைசறா அன்னையாரின் இல்லம் புகுந்தான். இம்முறை நடைபெற்ற வியாபாரம் பற்றி விலா வாரியாகக் கூறினான். இதற்கு முன்னர் எந்தப் பயணத்திலும் இப்படி ஒரு இலாபம் கிடைத்ததே இல்லை என்று திட்டவட்டமாகக் கூறினான். நடைபெற்ற அனைத்து விசயங்களையும் ஒன்று விடாமல் கூறி முடித்தான்.

இதன் நடுவே அன்னையாரின் இல்லம் வந்தார்கள் முஹம்மத் (ஸல்) அவர்கள். வியாபார விசயங்கள் பற்றி எதுவும் பேசவில்லை. தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதங்கள் அனைத்தையும் அன்னையாரிடம் ஒப்படைத்தார்கள். தனது சாச்சா அபூதாலிப் அவர்களது இல்லம் நோக்கி நடந்தார்கள். தற்போதைக்கு அதுதானே அவர்களது மனை.

தனது ஆத்மாவும் அவர் பின்னால் செல்வதுபோல் அன்னை அவர்களுக்கு ஒரு பிரமை ஏற்பட்டது. சமாளித்துக் கொண்டார்கள். இப்போது தன் பணியாள் சிறுவன் மைஸறாவை அழைத்தார்கள். இப்பிராயணத்தின் ஆரம்பம் முதல் கடைசி வரை நடந்தவற்றை விசாரணை செய்தார்கள். மைசறா கூறினான்.

'சென்ற காலங்களைவிட இம்முறை வெயில் அதிகம், மிகக் கடுமையான சூடு. சூரியன் அள்ளிக் கொட்டிய அணலில் முறுக்கேறி இருந்தது பாலை வெளி. வணிகக் கூட்டம் நடந்து செல்வது மிகவும் சிரமமாக இருந்தது. இவற்றை எவராலும் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியர்த்துக் கொட்டியது. வியர்வையால் பயணிகள் துவண்டு போயினர்.

இருந்தும் முஹம்மத் பின் அப்துல்லாஹ் அவர்கள் மாத்திரம் மிக அமைதியாகக் காணப்பட்டார். வெப்பத்தின் சாயல்கூட அவரின் மேல் பதியவில்லை. எந்தவித உபாதைக்கும் அவர் ஆளாகவில்லை. அவருக்கு மேலே மேகக் கூட்டமொன்று காணப்பட்டது. அது குடை பிடித்தது போன்று இருந்தது. அவர் செல்லுமிடமெல்லாம் அவரைத் தொடர்ந்து அதுவும் சென்று கொண்டிருந்தது'. தொடர்ந்தான் மைசறா . . . . . .

'இடை வழியில் ஒரு மர நிழலில் முஹம்மத் பின் அப்துல்லாஹ் அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அவ்விடத்துக்கு நஸ்தூறா என்ற பாதிரியார் வந்தார். என்னை அழைத்தார். மைசறா இம்மர நிழலில் ஒரு நபிதான் அமர்வார். எனவே, இவர் இச்சமூகத்தில் அனுப்பப்பட இருக்கும் நபி என்பதில் சந்தேகம் வேண்டாம். இவருக்கு நீ பணிவிடை செய். வழிப்படு. உதவியாய் இரு! என்றெல்லாம் என்னிடம் கூறிச் சென்றார்'.

மிக முக்கியமான நிகழ்வு ஒன்றும் நடந்தது என்று கூறித் தொடர்ந்தான் மைசறா.

'வியாபாரம் மிகவும் விறுவிறுப்பாக நடந்து கொண்டிருந்த வேளை. அவருக்கும் வேறொரு வியாபாரிக்குமிடையில் சிறு முறுகல் ஏற்பட்டது. அவ்வியாபாரி இவரைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து லாத், உஸ்ஸா என்ற இரு விக்கிரகங்கள் மீது சத்தியம் செய்யும்படி வேண்டினான்.

அவைகள் விக்கிரகங்கள். அவைகள் மீது நான் சத்தியம் செய்யவே மாட்டேன் என மிக உறுதியாக அதே நேரம் மிகவும் தெளிவாகவும் கூறினார். நீங்கள் கூறுவதே உண்மை என அவனும் ஏற்றுக் கொண்டான்' என தான் கண்டதும் கேட்டதும் அனைத்தையும் விலாவரியாக விவரித்தான் மைசறா.

மைசறா சொல்லச் சொல்ல அன்னையின் உள்ளம் குளிர்ந்து கொண்டு சென்றது. இந்நிலையில் தான் கண்ட கனவை மீட்டிப் பார்த்தார் அன்னை கதீஜா. தனது இல்லத்திலிருந்து பிரகாசித்து முழு உலகையும் ஆக்கிரமிக்கப் போகும் அச்சுடரை தத்ரூபமாக தன் முன்னால் கண்டார்கள் அன்னை அவர்கள்.

இதற்கு மேலும் பொறுமை காக்க அவர்களால் முடியவில்லை. அவரைத் திருமணம் செய்ய அன்னை அவர்கள் விரும்பினார்கள். தனது விருப்பத்தை அவரிடம் தெரிவிப்பதற்காக ஒருவரை அனுப்பத் தீர்மானித்தார்கள். தனது திட்டத்தை நேரடியாக கேட்கும் அளவு தைரியம் அவர்களிடம் இருக்கவில்லை. வெட்க உணர்வும் அவர்களிடம் அதிகமாகவே இருந்தது.

முஹம்மத் (ஸல்) அவர்களோ குறைஷிக் குலத்தில் பிறந்தவர்கள். அக்காலத்தில் அக்குலம்தான் மிகவும் பிரசித்தமான மதிப்பு வாய்ந்த குலம். அவரும்கூட மிகவும் மதிப்பு வாய்ந்த ஒருவர்தான். நம்பிக்கையாளர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையாளர் என்ற பட்டங்களுக்கெல்லாம் சொந்தக்காரர் இருந்தும் வறுமையில் வாடியது அவர்களது குடும்பம். அதற்காக அவர் வாய்மை தவறி வாழ்ந்த தில்லை. வழி தவறிச் சென்றதில்லை.

அன்னை கதீஜாவின் பார்வை அங்கும் இங்கும் நோட்டமிட்டது. ஒரு இடத்தில் நிலை கொள்ளவில்லை. அதேபோல் அவர்களது சிந்தனையும் தட்டுத் தடுமாறின. என்ன செய்வது. ஏது செய்வது என்பது புரியாது விழித்தார்கள்? தடுமாறினார்கள். அப்போது அங்கே அவர்களது தோழி முனப்பஹ் மகள் நபீஸா அவர்கள் வந்து சேர்ந்தார்கள்.

தன் தோழியைக் கண்டதும் சற்று ஆறுதல் கொண்டார்கள் அன்னை அவர்கள். தன் திட்டத்தை முதன் முதலில் தன் தோழியிடம் தெளிவுபடுத்தினார்கள். இத்திட்டத்திற்கு தோழியும் ஒப்புதல் வழங்கினார்கள். இவ்விஷயத்தை தானே முஹம்மத் பின் அப்துல்லாஹ் அவர்களிடம் எடுத்துச் சொல்வதாகவும் அவர்களது நிலைப்பாடு பற்றி அறிவிப்பதாகவும் கூறி அங்கிருந்து கிளம்பினார்கள் தோழி நபீசா அவர்கள்.

அபூதாலிப் அவர்களது இல்லம் நோக்கி நடந்தார்கள் நபீசா. முஹம்மத் பின் அப்துல்லாஹ் அவர்களை சந்தித்தார்கள். விபரத்தை விளக்கினார்கள்.

நபீசா : முஹம்மத் நீங்கள் ஏன் திருமணம் செய்து கொள்ளக் கூடாது? அதற்கு என்ன தடை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஹம்மத் : என் கையில் எதுவுமே இல்லை. நான் எப்படி திருமணம் செய்து கொள்வது?

நபீசா : எல்லாம் உங்களுக்கு சரியாக அமைந்தால்....... பணம், பொருள், அழகு, நல்ல குடும்பம் என்றெல்லாம் அமைந்தால் அதற்கு நீங்கள் உடன்படுவீர்களா?

முஹம்மத் : அப்படியான அவள் யார்?

நபீசா : குவைலித் மகள் கதீஜா.

முஹம்மத் : அது எப்படி சாத்தியம்?

நபீசா : அதை நீங்கள் விடுங்கள் நான் பார்த்துக் கொள்கிறேன்.

உரையாடல் முற்றுப் பெற்றது. வந்த வேலையும் கச்சிதமாக முடிந்தது. மலர்ந்த முகத்தோடும் ஆனந்தக் களிப்போடும் தன் தோழி கதீஜாவின் இல்லம் நோக்கி விரைந்தாள் நபீசா.

நடந்தவற்றை தோழி கதீஜா அவர்களிடம் கூறினாள் நபீசா. தன் திட்டம் நிறைவேறியதை எண்ணி சந்தோஷப்பட்டார் அன்னை. இருவரது உவகைக்கும் அளவே இல்லை எனலாம்.

சற்று நேரத்திலெல்லாம் இச்செய்தி மக்கமா நகரம் முழுவதும் பரவிவிட்டது. இது மக்கத்து மக்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சரியத் தில் ஆழ்த்தியது. காரணம், குறைஷியர்களில் மிக உயர்ந்த பெண், அநாதை ஒருவரை திருமணம் செய்யப் போவது ஆச்சரியம் தானே. அதற்கு அம்மக்களும் விதிவிலக்கல்லவே.

இது எப்படி சாத்தியமாயிற்று என மக்கத்துத் தலைவர்கள் சிலர் கிசுகிசுத்துக் கொண்டனர். அங்குள்ள பெண்களுக்கோ இது விஷயம் அவலாக மாறியது. கண்ட கண்ட இடமெல்லாம் இதுவே பேச்சாக இருந்தது. இது நடக்கின்ற காரியமா எனச் சிலர் வினாவும் எழுப்பினர்.

திருமண விஷயங்கள் பேசப்பட்டு முடிந்தாகிவிட்டது. நாளும் குறித்தாயிற்று. நல்லபடியாக காரியங்கள் நடந்து கொண்டிருந்தன. அதோ மணவாளி கதீஜாவின் வீடு. மணவாளர் முஹம்மத் பின் அப்துல்லாஹ் அவ்வீடு நோக்கி வந்து கொண்டிருக்கிறார். இதை அறிந்தார்கள் கதீஜா. அவர் விரும்புகின்ற விதமாக தன்னை எப்படி அலங்கரிக்கலாம்? எந்தவிதமாக அவரை வரவேற்கலாம்? என்றெல்லாம் சிந்தித்தார்கள் கதீஜா. அவர்களது சிந்தனை சிறகடித்தது.

இல்லறத்தில் இணைந்த இருவரும் மிகவும் நட்பாகவும், நேசமாகவும் இருந்தனர். மிக அமைதியாக வாழ்ந்தனர். எந்த ஒரு பிரச்சினைக்கும் அக்குடும்பத்தில் இடமிருக்கவில்லை. அதற்கு அங்கு இடமுமில்லை. அவர்களைச் சுற்றி காலம் வேகமாக ஓடியது.

எல்லாம் வல்ல அல்லாஹ் அத்தம்பதியினருக்கு பிள்ளைப் பாக்கியத்தைக் கொடுத்தான். மொத்தமாக ஆறு பிள்ளைகள் பெற்றெடுத்தனர். ஸெய்னப், ருகைய்யா, உம்மு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குல்தூம் , பாத்திமா என்ற நான்கு பெண்மக்கள். காசிம், அப்துல்லாஹ் என்ற இரு ஆண்மக்கள். இவர்களில் அப்துல்லாஹ்வும், பாத்திமாவும் நபித்து வத்திற்கு பின் பிறந்தவர்கள்.

ஆண் பிள்ளைகள் இருவரும் சிறு வயதிலேயே மரணமடைந்து விட்டனர். இது அவர்களது வாழ்வில் எந்த விளைவுகளையும் ஏற்படுத்தவில்லை. காரணம், இது இறைவன் ஒப்படைத்த அமானிதம். அதை அவன் திரும்ப எடுத்துக் கொண்டான் என்ற முடிவில் மிக உறுதியாக இருந்தார்கள். அதனால் பொறுமை காத்தார்கள். எனினும் கண் கலங்கத் தவறவில்லை. அது மனித இயல்பு. பாசம் யாரைத்தான் விட்டது.

இதன் நடுவேதான் புரட்சி ஒன்று பூதகரமாய் வெடித்தது. தம்பதியரின் வாழ்வில் மட்டுமல்ல. அரபு தேசத்தில் மட்டுமல்ல. பூமிப் பந்தையே ஒரு உசுப்பு உசுப்பியது. ஆட்டங்காணச் செய்தது.

முஹம்மத் (ஸல்) அவர்கள் ஹிறா மலைக் குகையிலே நீண்ட நாள் தவம் இருந்தார்கள். அப்போது அங்கே தான் இறைவனின் தூதுவரை முதன் முதலாக சந்திக்கின்றார்கள். அது வேறு யாருமல்ல. வஹீ கொண்டு வருகின்ற அமரர் ஜிப்ரீல் (அலை) அவர்கள்தான். இந்த சம்பவம் புனித ரமளான் மாதம் அன்று நடைபெற்றது.

ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபிகள் நாயகத்தைக் கட்டி அணைத்தார்கள். ஓதுங்கள் என கட்டளை பிறப்பித்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். உரத்துக் கூறினார்கள். எனக்கு ஓதத் தெரியாது என அமைதியாக விடையளித்தார்கள் நமது நபிகளார். உண்மையில் அவர்களுக்கு ஓதத் தெரியாதுதான். இதிலென்ன மறுப்பு இருக்கிறது. உண்மையை உரைக்க அப்போதும் அவர் அஞ்சவில்லை. எப்போதும் அஞ்சியதுமில்லை.

மீண்டும் கட்டி அணைத்தார் அமரர் ஜிப்ரீல் (அலை) அவர்கள். இது மிக்வும் இறுக்கமான அணைப்பாக இருந்தது. பின்னர் இப்படி ஓதுங்கள் என வானவர் கூறி ஓதினார்.

اقرأ باسم ربك الذي خلق . خلق الإنسان من علــق . اقــرأ

وربك الأكرم . الذي علم بالقلم . علم الإنسان ما لم يعلم.

**படைத்த உமது இறைவனின் பெயரால் ஓதுவீராக! அவன் மனிதனை கருவுற்ற சினை முட்டையிலிருந்து படைத்தான். ஓதுவீராக! உமது இறைவன் கண்ணியமானவன். அவனே எழுது கோலால் கற்றுத் தந்தான். அறியாதவற்றை மனிதனுக்குக் கற்றுத் தந்தான்.**

**(திருக்குர்ஆன் 96:1-5)**

நமது நபிகளாரும் ஓதினார்கள். வந்தவர் பிரிந்து சென்று விட்டார்.

இப்போது அவர்களைப் பயம் பற்றிக் கொண்டது. வியர்த்துக் கொட்டியது. நடுக்கம் பிடித்தது. உடம்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜுரம் ஏறியது. மிக விரைவாகக் குகையிலிருந்து இறங்கினார்கள். கதீஜா அவர்களது வீடு நோக்கி வேகமாக நடந்தார்கள். அங்குதான் இதற்கு அமைதியும் ஆறுதலும் கிடைக்கும் என முஹம்மத் (ஸல்) அவர்கள் நினைத்தார்கள்.

வீட்டினுள் நுழைந்த நபிகளார் நடந்தவற்றை கூறினார்கள். தம்மைப் போர்வையால் போர்த்துமாறு பணித்தார்கள். தன் கணவரின் நிலை கண்டு கதீஜா (ரலி) அவர்கள் நிலை குலைந்து போகவில்லை. தட்டுத் தடுமாறவில்லை. தலையிலடித்து ஒப்பாரி வைக்கவில்லை. ஓலம் எழுப்பவில்லை.

மாறாக தன் கணவரது கையை பிடித்து படுக்குமிடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். படுக்க வைத்து போர்வை கொண்டு போர்த்தினார்கள். ஆறுதல் சொன்னார்கள். மனம் நொந்துபோன நபியவர்களுக்கு இது இதமாக இருந்தது. தன் மனைவியின் உபசரிப்பில் இப்போது அவர் பழைய நிலைக்கு மீண்டிருந்தார்கள்.

புண்ணியவதி கதீஜா அவர்கள் நபிகளார் அருகே அமர்ந்தார். தம் மனைவியின் திருமுகம் நோக்கினார் நபிகளார். நடந்தவற்றை அப்படியே விளக்கினார். அவர் சொல்லி முடியும் வரை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். எந்தவித குறுக்கீடுகளும் செய்ய வில்லை. அவர் சொல்லி முடிந்ததும் பேச ஆரம்பித் தார்கள் அன்னையவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் கவலைப்பட வேண்டாம். அ மைதியாக இருங்கள். உங்களை அல்லாஹ் இழிவாக்க மாட்டான். கைவிட மாட்டான். நீங்கள் உறவினர்களோடு இணங்கி வாழ்கிறீர்கள். அவர்களுக்கு உதவியும் செய்கிறீர்கள். உண்மை பேசுகிறீர்கள். சமுதாயத்தில் பலவீன மானவர்களின் சுமைகளை தாங்கிக் கொள்கிறீர்கள். நலிந்து போனவர்களுக்கு உதவி புரிகிறீர்கள் என்று ஆறுதல் கூறி சாந்தப்படுத்தினார்கள்.

முன்னர் போலவே இம்முறையும் செயல்பட அன்னை அவர்கள் முடிவு செய்தார்கள். தன் கணவரை அழைத்துக் கொண்டு பெரியவர் வரகத் பின் நவ்பல் அவர்களின் இல்லம் நோக்கி நடந்தார்கள். அம்முதியவரிடம் நடந்தவை அனைத்தையும் ஒன்று விடாமல் நபியவர்கள் ஒப்புவித்தார்கள்.

அம்முதியவரோ வயதின் கடைசி எல்லைக்குச் சென்றிருந்தார். அதனால் கண் பார்வை மிகவு ம் குன்றி இருந்தது. முதிர்வால் முதுகும் கூனல் விழுந்திருந்தது. இருந்தும் முஹம்மத் (ஸல்) அவர்கள் சொன்னதைக் கேட்ட மாத்திரத்தில் துள்ளி எழுந்தார். தன் படுக்கையில் நிமிர்ந்து இருந்தார். அவ்விருவரையும் விழித்து பின்வருமாறு கூறினார்.

'உண்மையிலேயே நீர்தான் இச்சமுதாயத்தின் இறுதி நபி. இருந்தும் உமது சமூகம் உம்மை பொய்யர் என்று கூறும். உமக்குத் தொந்தரவுகள் கொடுக்கும். உம்மை வேதனைப்படுத்தும். அதுபோக ஊரை விட்டே உம்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரட்டவும் செய்யும். அந்த வேளையில் நான் உயிருடன் இருந்தால் நிச்சயம் என்னால் உமக்கு உதவ முடியும்'.

இதைக் கேட்ட நமது நபிகளார் 'என்னை என் சமூகம் ஊரை விட்டு விரட்டுவார்களா?' என்று திரும்பக் கேட்டுக் கொண்டே பெரியவரின் முகத்தை உற்றுப் பார்த்தார்கள்.

ஆம். உம்மைப் போன்று நபியாக வந்தவர்களை அவரவர்களது சமூகம் விட்டுவைக்கவில்லை. தொந்தரவு செய்தார்கள். தொல்லை கொடுத்தார்கள். சிலரை கொலையும் கூடச் செய்தார்கள். நீரும் அம்மக்களால் சோதிக்கப்படுவீர்.

என்று கூறி முடித்தார் பெரியவர். பின்னர் பெரியவரிடம் விடை பெற்றனர். அங்கிருந்து இருவரும் புறப்பட்டனர். நேராக அன்னையின் இல்லம் வந்தனர். இதன் பின் சில காலம் வஹீ என்ற அந்த வேத வாக்கு வரவும் இல்லை. வானவரின் வரவும் இல்லை.

இருந்தும் மீண்டும் அவரைச் சந்திக்க வேண்டும். அவருடன் பேச வேண்டும் என்ற ஆசை நபிகளாரின் உள்ளத்தில் குடிகொண்டது. இவ்வாசை நாளுக்கு நாள் அதிகரித்துச் சென்றது. மறை வசனங்களை வானவர் வாயால் கேட்க வேண்டும்போல் உணர்வு ஏற்பட்டது. இவ்வுணர்வு முத்தஸ்ஸிர் என்ற அத்தியாயத்தின் முதல் ஐந்து வசனங்கள் இறங்கும் வரை நீடித்தது. அவ் வசனங்கள் இவைதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போர்த்திக் கொண்டிருப்பவரே!**

**எழுந்து எச்சரிக்கை செய்வீராக!**

**உமது இறைவனை பெருமைப்படுத்து வீராக!**

**உமது ஆடைகளை தூய்மைப்படுத்துவீராக!**

**அசுத்தத்தை வெறுப்பீராக! (திருக்குர்ஆன் 74:1-5)**

இவ்வசனங்கள் இறங்கிய பின் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எழுந்தார்கள். மனைவி கதீஜாவிடம் வந்தார்கள். நன்றி கலந்த பார்வையை அவர்கள் மீது வீசினார்கள். பேச ஆரம்பித்தார்கள்.

கதீஜா நான் தூங்கி எழும்பிய காலம் முடிந்து விட்டது. ஏக இறைவனான அந்த அல்லாஹ் ஒருவனை மட்டுமே வணங்க வேண்டும் என்ற கொள்கையினால் மக்களை அழைக்குமாறு வானவர் ஜிப்ரீல் (அலை) எனக்கு கட்டளை இட்டு விட்டுச் செல்கிறார். யாரை நான் அழைப்பேன்? எனது அழைப்புக்கு யார் விடை தருவார்? என்று ஆதங்கப்பட்டுக் கூறினார்கள்.

உடனே அன்னை கதீஜா அவர்கள், முஹம்மதே நான் தயாராக இருக்கிறேன். எனக்கு அழைப்பு விடுங்கள். நான் உங்களை விசுவாசிக்கிறேன். நீங்கள் கூறுகின்ற அனைத்தையும் எந்தவிதமான கூடுதல் குறைவுமின்றி அப்படியே ஏற்றுக் கொள்கிறேன் என நபிகளாரிடம் கூறினார்கள். நபியவர்களும் தமது தூதுத்துவத்தை முதன் முதலில் அன்னை அவர்களிடம் எடுத்து கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே அன்னை அவர்கள் ஷஹாதத் கலிமாவை மொழிந்தார்கள். இஸ்லாத்தில் நுழைந்து விட்டதாக அறிவித்தார்கள். முஸ்லிம் என்று பிரகடனம் செய்தார்கள். இதன்மூலம் இவர்களே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட முதல் நபர் என்ற பெருமைக்கு ஆளானார்கள். இறை விசுவாசிகளில் முதன்மையானவர் ஆனார்கள். இறை ஒளியால் அவர்களது உள்ளம் பிரகாசித்தது.

தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் தனது பணியை ஆரம்பித்தார்கள். மக்காவிலே தன் உறவினர்களுக்கும், தன் சமூகத்தவர்களுக்கும் அழைப்பு விடுத்தார். உயர் குலத்தவர்களில் சிலரும், ஏழைகளில் அதிகமானோரும் அவ்வழைப்பை ஏற்றுக் கொண்டனர். புதிய மார்க்கமான இஸ்லாத்தில் நுழைந்தார்கள்.

உயர் குலத்து மக்கத்து தலைவர்களுக்கு இது பிடிக்கவில்லை. இதனால் சினமுற்றார்கள் அவர்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட அடிமைகள் சிலரை வதைத்தார்கள். இன்னும் சில வறியவர்களையும் கொடுமைப்படுத்தினார்கள். நபிகளாரையும் அவர் தோழர்களையும் கூட அவர்கள் விட்டுவைக்கவில்லை. அவர்களும் இம்சைக்கு ஆளானார்கள்.

இந்த நிலையில் அன்னை கதீஜா (ரலி) அவர்கள் நபிகளாருக்கு உறுதுணையாக நின்றார்கள். அழைப்புப் பணியிலே அவர்களுக்கு உதவி புரிந்தார்கள். அவ்வப் போது ஆறுதலும் கூறினார்கள். வருகின்ற இடர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைந்தார்கள். தேவைப்படுகின்றபோது தன் செல்வங் களையும் வழங்க அவர்கள் மறுக்கவில்லை.

குறைஷியர்கள் ஒன்று கூடினார்கள். அழைப்புப் பணியை ஒடுக்க திட்டம் தீட்டினார்கள். இதன்படி பனூஹாஷிம் கோத்திரத்தினரை அபூதாலிப் கணவாயில் ஒதுக்கி வைத்தார்கள். இந்நேரத்தில் தன் கணவருடன் சேர்ந்து அன்னை அவர்களும் அக்கால்வாயில் காலம் கழித்தார் கள். இக்காலப் பிரிவில் மிகவும் சிரமத்திற்கு ஆளானார் கள். பொருளாதாரத் தடையின் தாக்கத்தை அனுபவித் தார்கள். காலக்கெடு முடிவடைந்தபோது அம்மக்களுடன் சேர்ந்து அவர்களும் வெளியேறி னார்கள்.

துன்பத்தின் வாடையைக்கூட நுகராத பெண்மணி அன்னை கதீஜா அவர்கள், இக்காலப் பிரிவில் மிகவும் தளர்ந்து போய்விட்டார்கள். படுத்த படுக்கையாக ஆகிவிட்டார்கள். முஹம்மத் (ஸல்) அவர்களும் அன்னைக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டார்கள். நோய்வாய்ப்பட்டு படுக்கையில் கிடக்கும் மனைவியைப் பிரிந்து செல்ல அவர்களது மனம் இடம் தரவில்லை. இந்நிலை மூன்று நாட்கள்தான் தொடர்ந்தது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முதன் முதலில் விசுவாசித்த, அவர்களுக்கு உதவி ஒத்தாசையாக இருந்த, அவர்களை அளவு கடந்து நேசித்த, தன் செல்வங்களை அவர்களுக்காக வாரி வழங்கிய, அவர்களது அன்பு மனைவி கதீஜா (ரலி) அவர்களது ஆத்மா நபிகளாரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிலையிலேயே பிரிந்தது. (இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்) ...................... மக்கமா நகரில் அல்ஹஜூன் என்ற இடத்தில் அன்னையார் அவர்களது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

மனித வரலாற்றுப் பக்கங்களில் சில மூடப்பட்டு விட்டன. ஒரு அத்தியாயம் முடிவுக்கு வந்து விட்டது. விசுவாசிகளின் தாயார் மரணப்படுக்கையில் கிடக்கையில் வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபிகளாரிடம் வந்து, அன்னைக்கு அல்லாஹ் சலாம் சொல்லிவிட்டதாகச் சொல்லி, சுவர்க்கத்தில் அவர்களுக்கு ஒரு அழகிய மாளிகை கட்டப்பட்டுள்ளதாகவும் தகவல் சொன்னார்கள்.

அன்னையாரின் மரணத்தின் பின், நபிகளாரின் இல்லம் வெறிச்சோடிக் கிடந்தது. அவ்வீட்டில் அமைதி குடிகொண்டிருந்தது. இருந்தும் நபிகளாரின் பேச்சிலும் பார்வையிலும் அன்னை அவர்களே குறுக்கே நின்றார்கள். முஹம்மத் (ஸல்) அவர்கள் தனிமையின் துயரத்தை உணர்ந்தார்கள். அவர்களால் எதுவுமே செய்ய முடியாத ஒரு நிலை.

அவர்களுக்குப் பின் பல திருமணங்களை முஹம்மத் (ஸல்) அவர்கள் செய்தார்கள். அவர்களுள் அழகுமிக்கவர்களும் இருந்தனர். இளமைப் பருவத்தினரும் இருந்தனர். இருந்தும் அன்னை கதீஜா அவர்களது இடத்தை எவராலும் நிரப்ப முடியவில்லை. அவர்களுக்குக் கிடைத்த பேறு வேறு எவருக்குமே கிடைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு ஆட்டை அறுத்தால், அதன் இறைச்சிகளை அன்னை கதீஜா அவர்களது தோழிகளுக்கு அனுப்புமாறு கூறுவார்கள். கதீஜாவின் தோழிகளை நானும் நேசிக்கிறேன் என்றும் கூறுவார்கள். இந்த விஷயத்தை, அறிவிக்கும் அன்னை ஆயிஷா அவர்கள் 'கதீஜாவைத் தவிர உலகில் வேறு பெண்களே இல்லை என்று கருதுமளவிற்கு நபிகளார் நடந்து கொண்டார்கள்' எனவும் கூறி வைத்தார்கள்.

இப்படிப்பட்ட மிக சீரிய வரலாற்றுக்கு சொந்தமான அந்த அன்னையை நமது வாழ்விலும் முன் மாதிரியாய்க் கொள்வோமாக. நாமும் அவர்களை நேசிப்போமாக. நற்பேறு பெறுவோமாக.

## அன்னை கதீஜா [ரலி]யின் சிறப்புகள்

**அன்னை கதீஜா பின்த் குவைலித் (ரலி) அவர்கள் தாம் நபி (ஸல்) அவர்களின் முதலாவது துணைவியார் ஆவார். கதீஜா (ரலி)அவர்களுடைய நான்காவது முன்னோரான குஸய்யு பின் கிலாப் என்பாரில் நபி (ஸல்) அவர்களின் வம்சப் பரம்பரை இணைகிறது. அன்னை கதீஜாவை நபி (ஸல்) அவர்கள் தமது 25-வது வயதில் மணந்தார்கள். அப்போது கதீஜாவுக்கு வயது நாற்பது. அதற்கு முன் அபூ ஹாலா என்பவரையும், அவருக்கு முன் அத்தீக் பின் ஆயித் என்பாரையும் கதீஜா மணந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் ஒருவர் பின் ஒருவராக இறந்த பிறகு நபியவர்களை மணமுடித்தார்கள். நபி (ஸல்) - கதீஜா (ரலி) தம்பதியருக்கு ஸைனப், ருகய்யா, உம்மு குல்ஸூம்,**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஃபாத்திமா, காசிம், தாஹிர், தய்யிப் ஆகிய 7 குழந்தைகள் பிறந்தனர்.* இவர்களில் கடைசி மூவரும் இஸ்லாத்திற்கு முன்பே சிறு வயதில் இறந்து விட்டனர். மற்றப் பெண் குழந்தைகள் அனைவரும் இஸ்லாத்தில் இணைந்தது மட்டுமின்றி, நபியவர்களுடன் மக்காவைத் துறந்து ஹிஜ்ரத்தும் செய்தார்கள். நபி (ஸல்) அவர்களுடன் 24 ஆண்டுகள் வாழ்க்கை நடத்திய அன்னை கதீஜா (ரலி) அவர்கள், தமது 64-வது வயதில் ஹிஜ்ரத்திற்கு 5 ஆண்டுகளுக்கு முன்பு இறையடி சேர்ந்தார்கள்.

(ஃபத்ஹுல் பாரீ, உம்தத் துல் காரீ)

* நபி (ஸல்) அவர்களுக்கு பிறந்த நான்கு பெண் குழந்தைகள் மற்றும் காஸிம் என்ற ஆண் குழந்தை ஆகியோர் விசயத்தில் அறிஞர்களிடம் கருத்து வேறுபாடு இல்லை.

அப்துல்லாஹ், தாஹிர், தய்யிப் ஆகியோர் விசயத்தில் வரலாற்று அறிஞர்களிடம் கருத்து வேறுபாடு நிலவுகிறது. மூன்று பேரும் நபி (ஸல்) அவர்களுக்கு பிறந்த குழந்தைகள் என்று சிலரும், அப்துல்லாஹ் என்ற குழந்தையையே தாஹிர் என்றும் தய்யிப் என்றும் அழைத்தனர் என சிலரும், காஸிம் என்ற ஆண் குழந்தையைத் தவிர கதீஜா (ரலி) அவர்களுக்கு வேறு ஆண்குழந்தை பிறக்கவில்லை என்று மற்றும் சிலரும் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நபி [ஸல்] அவர்கள் கூறினார்கள்:

உலகின் பெண்களிலேயே (அன்று) சிறந்தவர் மர்யம் ஆவார். (இன்று) உலகப் பெண்களிலேயே சிறந்தவர் கதீஜா ஆவார்.

அறிவிப்பவர்: அலி (ரலி)

நூல்: புகாரி (3815)

## ஆயிஷா [ரலி] அவர்கள் கூறியதாவது:

**கதீஜா (ரலி) அவர்களின் மீது நான் ரோஷப்பட்டதைப் போல் நபி (ஸல்) அவர்களின் வேறெந்த மனைவியின் மீதும் ரோஷப்பட்டதில்லை. ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் அவரை அதிகமாக நினைவு கூர்ந்து (புகழ்ந்து பேசி) வந்தார்கள். அவர்கள் சில வேளைகளில் ஆட்டை அறுத்து அதைப் பல துண்டுகளாகப் பிரித்து, பிறகு அதை கதீஜாவின் தோழிகளிடையே (பங்கிட) அனுப்பி விடுவார்கள். சில வேளைகளில் நான் நபி (ஸல்) அவர்களிடம், 'உலகில் கதீஜாவைத் தவிர வேறெந்தப் பெண்ணும் இல்லாததைப் போல் நடந்து கொள்கிறீர்களே' என்று கேட்டதுண்டு. அப்போது அவர்கள், 'அவர் (புத்திசாலியாக) இருந்தார், (சிறந்த குணமுடையவராக) இருந்தார். (இப்படி, இப்படியெல்லாம் இருந்தார்.) மேலும், எனக்கு அவர் வாயிலாகத்தான் பிள்ளைச் செல்வம் கிடைத்தது' என்று பதில் சொன்னார்கள்.**

நூல் : புகாரி – 3818

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்மாயீல் பின் அபீ காலித் [ரஹ்] அவர்கள் கூறியதாவது:

அப்துல்லாஹ் பின் அபீ அவ்ஃபா (ரலி) அவர்களிடம், 'நபி (ஸல்) அவர்கள் கதீஜா (ரலி) அவர்களுக்கு நற்செய்தி எதுவும் சொன்னார்களா?' என்று நான் கேட்டேன். அவர்கள், 'ஆம்! (சொர்க்கத்தில்) கூச்சல் குழப்பமோ, களைப்போ இல்லாத, துளையுள்ள முத்து மாளிகை ஒன்றை (இறைவன் அவர்களுக்கு அளிக்க இருப்பது) கொண்டு (நற்செய்தி சொன்னார்கள்)' என்று பதிலளித்தார்கள்.

நூல் : புகாரி – 3819

## அபூஹுரைரா [ரலி] அவர்கள் கூறியதாவது:

(ஒரு முறை) நபி (ஸல்) அவர்களிடம் (வானவர்) ஜிப்ரீல் (அலை) அவர்கள் வந்தார்கள். 'அல்லாஹ்வின் தூதரே! இதோ கதீஜா தம்முடன் ஒரு பாத்திரத்தில் குழம்பு . . . . அல்லது உணவு . . . அல்லது பானம் எடுத்துக் கொண்டு உங்களை நோக்கி வந்து கொண்டிருக்கிறார். அவர் உங்களிடம் வந்தவுடன் அவருக்கு அவருடைய இறைவனின் தரப்பிலிருந்தும் என் தரப்பிலிருந்தும் சலாம் கூறி அவருக்கு சொர்க்கத்தில் கூச்சல் குழப்பமோ, களைப்போ காண முடியாத முத்து மாளிகை ஒன்று தரப்படவிருப்பதாக நற்செய்தி சொல்லுங்கள்' என்று சொன்னார்கள்.

நூல் : புகாரி – 3820

## ஆயிஷா [ரலி] அவர்கள் கூறியதாவது:

ஹாலா பின்த்து குவைலித் – (கதீஜா (ரலி) அவர்களின் சகோதரி) – அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் வருவதற்கு அனுமதி கேட்டார். உடனே நபி (ஸல்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவர்கள் (கதீஜா-ரலி-அவர்களைப் போன்ற குரலில் ஹாலாவும் அனுமதி கேட்ட காரணத்தால்) கதீஜா (ரலி)அவர்கள் அனுமதி கேட்கும் விதத்தை நினைவு கூர்ந்து கவனம் மாறி, 'இறைவா! இவர் ஹாலாவாக இருக்கட்டும்' என்று சொன்னார்கள். உடனே நான் ரோஷமடைந்து, 'எப்போதோ மரணமடைந்து விட்ட, தாடைகள் சிவந்த ஒரு குறைஷிக் கிழவியை ஏன் (எப்போது பார்த்தாலும்) நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? அவருக்கு பதிலாக அவரை விடச் சிறந்த மனைவியை உங்களுக்கு அல்லாஹ் கொடுத்து விட்டானே (அப்படியிருக்க, இன்னும் ஏன் அவரையே நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்)' என்று கேட்டேன்*.

நூல் : புகாரி – 3821

---

* (இவ்வாறு ஆயிஷா (ரலி) அவர்கள் பேசியவுடன் நபி (ஸல்) அவர்கள் கோபமடைந்ததாகவும் – உடனே ஆயிஷா (ரலி) அவர்கள், 'உங்களை சத்தியத்தைக் கொண்டு அனுப்பிய அல்லாஹ்வின் மீது ஆணையாக! இனி கதீஜா குறித்து நல்லதை மட்டுமே கூறுவேன் எனக் சொன்னதாகவும் அஹ்மத் மற்றும் தப்ராணியின் அறிவிப்பில் காணப்படுகிறது).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தா செலுத்துவீர்

- நபித்தோழியரின் வரலாற்று சம்பவங்கள் ...
- நபிமார்களின் வரலாற்றுத் தொடர் ...
- நபித் தோழர்களின் வரலாற்றுத் தொடர் ...
- பொது அறிவு செய்திகள்
- பயனுள்ள கேள்வி – பதில்கள்
- பரிசுப் போட்டிகள்

என தொடர்ந்து வெளிவரும்

# முஸ்லிம் பெண்மணிக்கு

இன்றே சந்தா செலுத்துவீர் !

ஆண்டு சந்தா

**உள்நாடு ரூ. 70.00**

**வெளிநாடு ரூ. 300.00**

தனிஇதழ் ரூ. 6/–

தொடர்புக்கு :

# முஸ்லிம் பெண்மணி

(தமிழ் மாத இதழ்)

248, தம்புச்செட்டித் தெரு (முதல் மாடி)

சென்னை – 600 001.

போன் : 2522 4821



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org